(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 67.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 யூலை 11, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ சமிந்த லலித் குமார**

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ டி.வீ. சானக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ நிசாந்த ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

**கௌரவ இம்ரான் மகரூப்**

**கௌரவ ருவன் மாபலகம**

**கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ**

**கௌரவ சுனில் ரத்னசிரி**

**கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க**

**கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக**

**கௌரவ துரைராசா ரவிகரன்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்**

**கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள —

(i) சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 01 ஆம் பகுதி;

(ii) திணைக்களங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 01 ஆம் பகுதி;

(iii) பிரதேச செயலகங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 01 ஆம் பகுதி;

(iv) அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 01 ஆம் பகுதி;

(v) அரச வங்கிகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 02 ஆம் பகுதி;

(vi) கூட்டுத்தாபனங்கள் – சபைகள் — பணியகங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 02 ஆம் பகுதி;

(vii) பல்கலைக்கழகங்கள், பட்டப்பின்படிப்பு நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 02 ஆம் பகுதி;

(viii) நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 02 ஆம் பகுதி;

(ix) வெளிநாட்டு நிதியீட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 04 ஆம் பகுதி;

(x) மாகாண சபைகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 05 ஆம் பகுதி;

(xi) உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 06 ஆம் பகுதி;

(xii) அரச கம்பனிகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதியின் 09 ஆம் பகுதி; மற்றும்

(xiii) சுற்றாடல் கணக்காய்வு மற்றும் செயலாற்றுகை கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கையின் பதினோராவது தொகுதி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கைச் சுங்கத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2024 ஆம் ஆண்டுக்கான அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iv) 2024 ஆம் ஆண்டுக்கான நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பீடிக்கான வரியொன்றினை விதித்தல் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க தகவல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் 7(1) மற்றும் 8(2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 15 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2343/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான உரிமைகள் காப்புறுதி நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் மற்றும் கணக்குகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சுற்றாடல் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்—

(i) 2024 ஆம் ஆண்டுக்கான சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் வருடாந்தச் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான உயர் நீதிமன்றப் பதிவாளரின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 யூன் 04 ஆம் திகதிய 2439/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான நீர் வளச் சபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான முன்னைய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கும்புக்வெவ, கருவலகஸ்வெவ வீதி, மைலமட, திஹவ எனும் முகவரியில் வதியும் திருமதி சந்திரகாந்தி வீரசிங்ஹவினது 2025.03.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்ஷன சமர்ப்பித்தார்.

(2) திருகோணமலை, தபால் அலுவலக மாவத்தை, இல. 72 இல் வதியும் திரு. எல்.ஜே. பெப்டிஸ்டினது 2025.01.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அருண் ஹேமச்சந்திரா சமர்ப்பித்தார்.

(3) கம்பளை, ஹொன்டியாதெனிய, கிரிந்த, இல. 102/2 இல் வதியும் திரு. எஸ்.ஏ. சாலிய ரஞ்ஜித் பண்டாரவினது 2024.12.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(4) பஸ்ஸர, கோவில் கடை, இல. 12/135 இல் வதியும் திரு. கே.டி. ஜயந்த ரஞ்ஜித்தினது 2025.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாமர சம்பத் தசநாயக சமர்ப்பித்தார்.

(5) சிலாபம், அலுத்வத்த, இல. 137/18 இல் வதியும் திரு. டப்ளியூ.எச்.ஏ. குமார் தமெலினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ சமர்ப்பித்தார்.

(6) (i) நுகேகொட, மிரிஹான, கல்வல வீதி, இல. 49 இல் வதியும் திரு. ஏ. கமகே மற்றும் மேலும் ஏழு பேரினதும் 2025.02.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) மஹரகம, தம்பஹேன வீதி, இல. 10/ஏ யில் வதியும் திரு. வலிமுனி ராஜ் மென்டிஸ் அபேசேகரவினது 2025.02.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தேவானந்த சுரவீர சமர்ப்பித்தார்.

(7) நக்காவத்த, பரிகொட, லேகம்வத்த எனும் முகவரியில் வதியும் திரு. ஐ.டி. தயாரத்னவினது 2025.05.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற ) ஜீ.டி. சூரியபண்டார சமர்ப்பித்தார்

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்):** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— குடியியல் மற்றும் வர்த்தக பிணக்குகளின் மத்தியஸ்திற்காகவும்; 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தினை நீக்குவதற்காகவும்; அவற்றோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 யூலை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்:** கௌரவ சமிந்த விஜேசிறி அனுவதிக்க கௌரவ ரோஹண பண்டார பின்வருமாறு பிரேரரித்தார்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.14/2024]

“கௌரவ கிட்ணன் செல்வராஜ் தலைமை தாங்குவாராக” என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.30 மணிக்கு கௌரவ கிட்ணன் செல்வராஜ் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**6. தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்:** கௌரவ ரோஹண பண்டார அனுவதிக்க கௌரவ சமிந்த விஜேசிறி பின்வருமாறு பிரேரரித்தார்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.[பா.23/2024]

(பி.ப. 1.41 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்:** கௌரவ சமிந்த விஜேசிறி அனுவதிக்க கௌரவ ரவி கருணாநாயக்க பின்வருமாறு பிரேரரித்தார்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.27/2024]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு**: "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், பி.ப. 3.18 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளரால் 2025 யூலை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.